# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்

**நிலையறிபரீட்சை – 2021**

## புவியியல் –I,II

| பெயர் ∴ சுட்டெண் :- ………………… | தரம் :- 6 | நேரம் :- 2 மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி 1

1. பின்வருவனவற்றுள் மிகப்பெரிய நிர்வாக அலகு எது?
   i. கிராமஉத்தியோகத்தர் பிரிவு    ii. பிரதேசசெயலாளர் பிரிவு
   iii. மாவட்டம்    iv.மாகாணம்

2. அ. பிறப்புச் சான்றிதழை வழங்குதல்
   ஆ. நற்சான்றிதழ் வழங்குதல்
   இ. கடிதம் விநியோகித்தல்
   ஈ. இலவச நூல்களை விநியோகித்தல்
   மேலுள்ள அம்சங்களுள் கிராம உத்தியோகத்தரின் கடமையாக அமைவது
   i. அ    ii. ஆ    iii. இ    iv. ஈ

3. விமல் மாலையில் சூரியனை நோக்கி நிற்கின்றான். அவனுக்கு பின்னால் உள்ள திசை
   i. மேற்கு    ii. வடக்கு    iii. தெற்கு    iv. கிழக்கு

4. மரங்களின் விதை பரவுவதற்கு உதவும் ஒரு உயிரினம்
   i. வௌவால்    ii. கறையான்    iii. செண்பகம்    iv. காகம்

5. சலுகை விலையில் மருந்துகளை வழங்கும் அரச நிறுவனம்
   i. ஜனசவிய    ii. சதோச    iii. ஒசுசலா    iv. ஜனச

**6 - 10 வரையான வினாக்களுக்கு பொருத்தமான விடைகளைத் தெரிவு செய்து கீறிட்ட இடங்களை நிரப்புக.**

6. மழைவீழ்ச்சியை அளவிடுவதற்கு……………………அலகு பயன்படுத்தப்படுகின்றது.
7. திட்டப்படம் வரைவதற்கு மிகவும் அவசியமான காரணி……………………. ஆகும்
8. இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட மாவட்டங்கள் ஒன்றிணைவதன் மூலம் ……………….. உருவாகிறது.
9. இலங்கையின் தலைநகரமான ஸ்ரீ ஜெயவர்த்தனபுர கோட்டை……………………………… மாவட்டத்தில் அமைந்துள்ளது.
10. உயர் நிலங்களில் அமைந்துள்ள வீடுகளுக்கு ஏற்படக்கூடிய முக்கிய அபாயம் …………… ஆகும்.

(மாகாணம் / நிலச்சரிவு / கொழும்பு / திசை / mm / c)



kalvi.lk

**பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் சரி (√ ) எனவும் பிழையாயின் (x ) எனவும் அடையாளம் இடுக.**

11. இலங்கையில் 25 மாவட்டங்கள் உள்ளன. ( )
12. தாவரங்களின் முறையான வளர்ச்சிக்கு ஒட்சிசன் உதவுகின்றது. ( )
13. ஒடுங்கிய நீராவி படிவுவீழ்ச்சியாக பூமியை வந்தடைகின்றது. ( )
14. ஆற்றுப்பள்ளத்தாக்குகளில் நெற்செய்கையினை மேற்கொள்ள முடியும். ( )
15. வெசாக் பொசன் போன்ற சமய விழாக்கள் பௌத்தமதத்தினருடன் தொடர்புடையதாகும். ( )

**தொடர்புபடுத்துக**

| | “அ” | “ஆ” |
|---|---|---|
| 16. | மரத்தளபாடங்கள் | தும்பறை |
| 17. | முகமூடிகள் | பிலிமத்தலாவ |
| 18. | பித்தளைபொருட்கள் | ரதாவடுன்ன |
| 19. | பிரம்புசார் உற்பத்திகள் | அம்பலாங்கொடை |
| 20. | பாய்கள் | மொரட்டுவ |

(20x2=40 புள்ளிகள்)


## பகுதி–II

முதலாம் வினா கட்டாயமானது. ஏனையவற்றில் நான்கு வினாக்களைத் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

1. இலங்கைப்புற உருவப்படத்தில் பின்வரும் இடங்கள் குறித்து நிற்கும் இலக்கங்களை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

Education கல்வி

1. முல்லைத்தீவு ( )
2. வவுனியா ( )
3. மன்னார் ( )
4. மாத்தளை ( )
5. கண்டி ( )
6. கொழும்பு ( )
7. மொனராகலை ( )
8. திருகோணமலை ( )
9. பொலன்னறுவை ( )
10. அனுராதபுரம் ( )
11. புத்தளம் ( )
12. மேல் மாகாணம் ( )



(12 புள்ளி)

I) i.உமது பாடசாலைச் சூழலில் அமைந்துள்ள பொது இடங்கள் ஐந்து தருக.
ii. உமது மாகாணத்தில் அடங்கியுள்ள மாவட்டங்களை பெயரிடுக.
iii.“எனது பாடசாலையின் அமைவிடம்” என்ற தலைப்பில் ஐந்து வாக்கியங்களை எழுதுக.
(3+4+5 = 12புள்ளி)



kalvi.lk

II) i.வானிலைத் தரவுகளைச் சேகரிக்கும் வளிமண்டலவியல் திணைக்களம் எங்கு அமைந்துள்ளது?
ii.பின்வரும் வானிலை மூலகங்களை அளவிடப் பயன்படும் கருவிகளை குறிப்பிடுக.

அ. வெப்பநிலை ஆ. மழைவீழ்ச்சி
இ. காற்றின் வேகம் ஈ. காற்றின் திசை

iii.வானிலை அறிக்கையினால் பயன்பெறுவோர் நால்வரினைக் குறிப்பிடுக.

(3+4+5 = 12 புள்ளி)

III) i.கடற்கரையோரத்தில் வீடு அமைந்திருப்பதால் ஏற்படும் நன்மை மூன்று தருக.
ii. வீட்டுச் சூழலில் காணப்படும் விலங்குகள் இரண்டு தந்து அவற்றினால் ஏற்படும் பயன்களைத் தருக.
iii.தாவரங்களால் கிடைக்கும் பயன்கள் ஐந்து தருக.

(3+4+5 = 12புள்ளி)

IV) i.இடம்பெயர் பறவை என்றால் என்ன?
ii.இடம்பெயர் பறவைகளுக்கு மூன்று உதாரணம் தருக.
iii.மதவிழாக்களின் போது உங்கள் அயலவர்களுடன் ஒன்றிணைந்து செயல்படும் விதத்தை உதாரணங்களுடன் விளக்குக.

(3+4+5 = 12புள்ளி)

V) i. உமது பாடசாலை அமைந்துள்ள பிரதேசத்தில் இடம்பெறும் பொருளாதார நடவடிக்கைகள் மூன்று தருக.
ii.உமது பிரதேசத்தில் காணப்படும் சேவைத்துறைகளினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை (நன்மைகளை) தருக.
iii.பாடசாலை மாணவர் என்ற அடிப்படையில் நீர் பெறும் சேவைகள் மூன்று தருக.

(3+4+5 = 12புள்ளி)

VI) i. சூழலின் அடிப்படை அம்சங்கள் இரண்டு தருக.
ii.நிலத்தை மனிதன் பயன்படுத்தும் வழிமுறைகள் மூன்று தருக.
iii.முறையற்ற நிலப்பயன்பாட்டினால் ஏற்படும் பாதிப்புக்கள் நான்கு தருக.

(3+4+5 = 12 புள்ளி)



kalvi.lk

GRADE

# 6,7,8

STUDY WITH US..!

# SCIENCE

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் கணித பாட வகுப்புகள்.

- ✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
- ✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
- ✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

**TAMIL MEDIUM**

850/= Monthly

**ENGLISH MEDIUM**

1000/= Monthly

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.



கல்வி

Digital Learning Platform

www.kalvi.lk

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page